VOLUME 1 | ISSUE 1 | YEAR [illegible]

தொகுதி 1 பகுதி 1 வருடம் [illegible]

# INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

# சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22447

# தமிழ் காப்பியங்கள் குறிப்பிடும் நோய்களும் மருத்துவமும்

க. சிங்காரவேலு [அ, *]

[அ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்-632115, தமிழ்நாடு, இந்தியா

# Diseases and Medicine referred to in Tamil Epics

K. Singaravelu [a, *]

[a] Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore-632115, Tamil Nadu, India

* Corresponding Author:
tamilsingam80@gmail.com

Received: 25-07-2022
Revised: 30-09-2022
Accepted: 05-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

Birth is a rare opportunity given by nature to all living beings that appear in the world. It is our duty to maintain health and protect the body from diseases. Diseases have arisen since the time of man's birth. Diseases are a source of pain for our body. It is customary to wish us to live without disease when others greet us. To live without disease is great wealth. The epics contain information about the definition of the disease, the causes of the onset of the disease, and the types of diseases.

**Keywords:** Disease, Birth, Pain, Tamil Epics

## முன்னுரை

உலகில் தோன்றும் அனைத்து உயிரினங்களுக்கும் இயற்கையால் தரப்படும் அரிய வாய்ப்பு பிறப்பு ஆகும். உடல் நலம் காத்து உடலை நோயின்றி பாதுகாப்பது நம் கடமையாகும். மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே நோய்கள் தோன்றியுள்ளன. நோய்கள் நம் உடலுக்குத் துன்பம் தரும் ஒன்றாகும். நம்மை பிறர் வாழ்த்தும்போது நோயின்றி வாழவேண்டும் என வாழ்த்துவது மரபாக உள்ளது. நோயின்றி வாழ்வதே பெரும்செல்வமாகும். காப்பியங்களில் நோயின் வரையறை, நோய் தோன்றுவதற்கான காரணங்கள், நோய்களின் வகைகள் போன்ற செய்திகள் காணப்படுகின்றன. அவற்றை ஆராய்ந்து எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

## நோய்கள்

சீரான உடல்நிலையைப் பாதிக்கின்ற இயல்பான உடல், உள்ளப் பணிகளை முடக்கும் எந்தவொரு நிலைமையையும் பொதுவாக நோய் என்கிறோம். நோய் என்பது நோய்த்தொற்றுகளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. நோயினை வியாதி, பிணி போன்ற சொற்களால் காப்பியங்களில் குறிப்பிட்டுள்ளனர். இது அனைத்து வகையான உடல் துன்பங்களையும் குறிக்கும். உடல் உள்ளுறுப்புகள் சரியாக செயல்படவிடாமல் அவற்றை இறுக பிணித்து துன்புறுத்துவதால் பிணி எனப்பட்டது. பிணியின் இலக்கணத்தை,

"பிணி எனப்படுவது சார்பின் பிறிதுஆய்

இயற்கையில் திரிந்து உடம்பு இடும்பை புரிதல்" (Venkatasami Nattar & Duraiswamy Pillai, 2019)

என்ற பாடல்மூலம் அறியமுடிகிறது. மனிதனின் உடலில் வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் சரியான அளவு இருந்தால் நோய்கள் தோன்றாது. இவற்றின் அளவு கூடினாலோ, குறைந்தாலோ நோய்கள் உண்டாகும். மனிதர்களுக்கு உண்டாகும் ஒருசில நோய்களுக்கு மனிதர்களே காரணமாக அமைகின்றனர்.

## மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள்

நம் உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களுக்கு மருந்தினால் குணப்படுத்துவது ஒருவகையும், எந்த ஒரு மருத்துவ முறையாலும் குணப்படுத்தாதது மற்றொரு வகையாகவும் காணப்படுகிறது. நாம் உட்கொள்ளும் மருந்தின் தன்மையால் நோய் தீர்ந்தது போல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும், முற்றிலும் தீராமல் உள்ளுக்குள்ளாகவே அடங்கி நின்று துன்பம் தருவது மூன்றாவது வகையாகும். உடலுக்கு ஏற்படும் நோய்களை மூன்று வகைகளாக பிரித்துக் குறிப்பிடுவதை,

"தீர்வனவும் தீராத் திறந்தனவுஞ் செய்ம்மருந்தின்

ஊர்வனவும் போலா துவசமத்தி னுய்ப்பனவும்

யார்வினவுங் காலு மவைமூன்று கூற்றவா

நேர்வனவே யாகு நிழறிகழும் பூணாய்" (Vellaivaarananaar, 2016)

என்ற பாடலின் மூலம் அறியமுடிகிறது. மனிதனுக்கு ஏற்படும் நோய்களாக குட்ட நோய், மயற்கை நோய், பசிநோய், மாலைக்கண் நோய், தலைநோய், தோல்நோய், மன நோய் எனப் பல்வேறு நோய்களைக் காப்பியங்கள் குறிப்பிடுவதை அறியலாம்.

### குட்டநோய்

தொழுநோய் அல்லது குட்டநோய் மைக்கோபேக்டீரியம் லெப்ரேயாவால் ஏற்படும் நீடித்த தொற்று நோயாகும். தோலையும், நுனி நரம்புகளையும் பாதிக்கச் செய்கிறது. உடலில் புள்ளிகள் ஏற்பட்டு பெரியதாகி பரந்து உணர்விழந்து பக்கவாதம் ஏற்படுத்துவதே இந்நோயின் தன்மையாகும். தசை இழப்பு ஏற்பட்டு இறுதியில் உறுப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும். இந்நோயினை அழுகுமெய் என்னும் பெயரில் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இந்நோயினைத் தொழுநோய், குட்டம், பெருவியாதி, மேகநீர், மேகநோய் எனப் பல்வேறு பெயர்களில் காப்பியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

குட்ட நோய் வருவதற்கான காரணமாக நட்பிலே வஞ்சித்தவனுக்கும், பிறர் மனைவியின் மீது ஆசை கொண்டவனுக்கும், மிகுந்த நெருப்புபோல பெண்களைச் சீரழித்து திருமணமாகாதவனுக்கும், உயிரைக் கொன்று உடலை உண்டவனுக்கும், அமைச்சனாக இருந்து தனது சூழ்ச்சியினால் அரசனை ஒழித்தவனுக்கும் குட்ட நோய் என்னும் பெருநோய் இக்காலத்திலும் மறுபிறவியிலும் வரும் என்பதை,

"நட்பிடைக் குய்யம் வைத்தான் பிறர்மனை நலத்தை சேர்ந்தான்

குட்டழற் காமத் தீயிற் கன்னியை கலக்கி னானு

மட்டுயி ருடலந் தின்றா னமைச்சனா யரசு கொன்றான்

குட்டநோய் நரகந் தம்முள் குளிப்பவ ரிவர்கள் கண்டாய்" (Tirutakkatevar, 2015)

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது.

### குட்ட நோயின் அறிகுறிகள்

தொழுநோயால் பாதிக்கப்பட்டவரின் உடலில் உள்ள நரம்புகள் வெளியே தோன்றுமாறு காட்சியளிக்கும். நடக்கும் போது தளர்ந்த நடையாக நடப்பர். உடல் முழுவதும் தோல் சுருங்கி தேய்ந்த விரலையும் கையினையும் பெற்றிருப்பர். சுருங்கிய முகமும், கோபம் கொண்ட முகத்தோற்றமும்

இதழ்கள் புண்ணுற்று கண்கள் உள்ளே குழிந்தும் கூன் விழுந்தும் சில பற்கள் விழுந்தும், சில பற்கள் நீண்டும் காணப்படும் எனக் குறிப்பிடப்படுவதை,

"நரம்புகள் விசித்த மெய்யன் நடையினிற் கழுதனைந்தோன்

திரங்கிய விரலன் கையன் சிறுமுகம் சினவன் சீறிற்

குரங்கிளை யனையன் கூனன் குழிந்து புக்கழிந்த

நெருங்கலு நிரலுமின்றி நிமிர்ந்துள சில பல்லென்றாள்" (Duraiswamy Pillai, 2019)

என்ற பாடலடிகள் மூலம் குட்டநோய் பாதிக்கப்பட்டவரின் உடலினைப் பற்றித் தெளிவாக அறியமுடிகிறது. அனைத்து நோய்களையும் குணப்படுத்த முடியும் குட்டநோய் என்னும் பெருநோய் குணப்படுத்துவது என்பது அரிதானதாகும். இந்நோய் உடலினை உருக்குலைத்துவிடும் என்பதை அறியமுடிகிறது.

## மயற்கை நோய்

பெண் கருவுற்ற காலத்தில் வரும் நோய் மயற்கை நோய் ஆகும். கருவுற்ற முதல் மூன்று மாதங்களில் பெண்ணின் உடலில் சில மாற்றங்கள் நிகழும். இதன் காரணமாக கருவுற்றவர்களுக்கு ஒருவிதமான ஆசை உணர்வு ஏற்பட்டு சுவையில் ஒரு எதிர்மறையான உணர்வு ஏற்படும். ஆரம்ப காலங்களில் காணப்படும் உடற்சோர்வு, வாந்தி, மயக்கம் முதலான அசாதாரண உடல்நிலையாகும். மிகவும் பிடித்த உணவினைப் பிடிக்காமல் போவது, புளிப்புச்சுவையை பெரிதும் உண்பது, மண் உண்பது, பிடிக்காத உணவுப் பொருட்களின் மீதான ஆசைகள் போன்றவை இந்நோயின் அறிகுறிகளாகும். இந்நோயினை வயா நோய், மயற்கை நோய், மசக்கை நோய் எனப் பல பெயர்களில் குறிப்பிடுகின்றனர். உதயண குமார காவியத்தில் மயற்கை நோய் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை,

"முற்றிழை மாலைத் தத்தை முனிவில்சீர் மயற்கை யானாள்" (Duraiswamy Pillai, 2019)

என்ற பாடலடியின் மூலம் அறியலாம். மயற்கைநோய் உள்ளவர்களுக்குப் பல்வேறு ஆசைகள் வரும். அவ்வாசையைத் தீர்த்தலே அந்நோய்க்கு மருந்தாகும். வாசவதத்தை கருவுற்றிருந்த காலத்தில் வானில் பறந்து சென்று பல்வேறு காட்சிகளையும் காண விருப்பம் கொண்டாள். அவ்விருப்பத்தை நிறைவேற்ற வான்வெளியில் பறந்து பல்வேறு காட்சிகளைக் கண்டு ரசித்த பின்பு மசக்கை நோய் தீர்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளதை,

"மாதுதன் வயாநோய் தீர்ந்து வளநகர் புக்க" (Duraiswamy Pillai, 2019)

என்னும் பாடலடியில் அறியமுடிகிறது.

## பசிநோய்

பசி நோயினை யானைத்தீ நோய், வேழம் நோய், பசிப்பிணி என்னும் பெயர்களில் காப்பியங்களில் குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் தோன்றிய நோய்கள், அவற்றிற்கான மருந்துகள் மூலம் நோய்கள் தீர்க்கப்பட்டன. பசி என்னும் நோயே நோய்களில் கொடுமையானது என்றும், பசி வயிற்றுக்கு உணவு மட்டுமே உரிய மருந்தாகக் கருதப்பட்டது. பசி, பிணி, பகை இம்மூன்றும் இல்லாத நாடே சிறந்த நாடாகக் கருதப்பட்டதை,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்க" (Venkatasami Nattar & Duraiswamy Pillai, 2019)

என்ற பாடலடிகளில் அறியமுடிகிறது. யானைத்தீ நோயினைச் சீவக சிந்தாமணியில் துளைபொருந்திய நீண்ட கையுடைய யானையின் பெயரையுடைய நோய் என்றும், வேழம் நோய் என்பதை,

"தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்" (Tirutakkatevar, 2015)

"வெஞ்சின வேழ முண்ட வெள்ளிலின் வெறிய மாக" (Tirutakkatevar, 2015)

என்ற பாடலடியின் மூலம் அறியமுடிகிறது. பசிப்பிணி என்னும் நோய் வந்தால் ஒருவரின் குடிப்பிறப்பினால் வந்த தகுதியை அழித்துவிடும். தூய்மையான இயல்புகளைச் சிதைத்துவிடும். வாழ்வுக்குப் பற்றுக்கோடாகக் காணப்படும் கல்வியினைப் போக்கிவிடும். நாணமாகிய அணியினையும் நீக்கிவிடும். மேன்மை பொருந்திய அழகினை எல்லாம் அழிக்கும். பிறரின் வாசலில் சென்று உணவிற்காக நிற்கும் நிலை ஏற்படும் அத்தகைய பாவியானது பசிப்பிணி என்னும் நோயாகும் எனக் குறிப்பிட்டுள்ளதை.

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்

பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்

நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்

பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்

பசிப்பிணி என்னும் பாவி" (Venkatasami Nattar & Duraiswamy Pillai, 2019)

என்ற பாடலில் அறியலாம். பசிப்பிணி ஒரு கொடிய நோயாகக் கருதப்பட்டது. இத்தகைய கொடிய நோயைத் தீர்ப்பது உணவு. எனவே பசிப்பிணி போக்கும் உணவு ஒரு மருந்தாகுமென்பதை.

"யானைத்தீ நோய் அரும்பசி கொடுத்தது

ஊன் உடை மக்கட்கு உயிர் மருந்து இது என" (Venkatasami Nattar & Duraiswamy Pillai, 2019)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். மேலும், பசிப்பிணிக்கு மருந்தாக பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பழுக்கும் நாவல்பழத்தை உண்போர் பசிப்பிணி இல்லாமல் இருப்பர் எனக் குறிப்பிடுவதை.

"சீர்திகழ் நாவலிற் றிப்பிய மானது

ஈரா றாண்டில் ஒருகனி தருவது

அக்கனி யுண்டோர் ஆறீ ராண்டு

மக்கள் யாக்கையின் வரும்பசி நீங்குவர்" (Venkatasami Nattar & Duraiswamy Pillai, 2019)

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது.

## மாலைக்கண் நோய்

மாலைக்கண் நோயானது சூரிய வெளிச்சம் உள்ள பகல் முழுவதும் கண்பார்வை நன்றாகத் தெரிந்து மாலையில் சூரியன் மறைந்த பிறகு கண்பார்வை சரியாகத் தெரியவில்லையெனில் அதை மாலைக்கண் நோய் என்பர். சூரிய ஒளிக்கு இணக்கம் செய்து கொள்ளும் விழித்திரை செல்கள் அவர்களுக்கு மிகவும் குறைவாக இருப்பதால் சூரியன் மறைந்த உடனேயே அவர்களுடைய பார்வை மங்கிப் போய்விடுகிறது. இந்த மாலைக்கண் நோயானது அக்காலத்தில் மக்களுக்கு பாதித்திருந்ததை.

"இருளுடை மாலைக்கண் தோன்றாது எனக்கென நண்பகலே

பொருளுடை யார்பொருள் கொள்வான்" (Vellaivaarananaar, 2016)

என்னும் பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது. கள்வன் ஒருவன் இரவு நேரத்தில் தனக்கு கண் தெரியாது பொருள் இருக்கின்ற இருப்பிடம் காண இயலாது பகலிலே சென்று பொருள் களவாடியதாகக் கூறப்பட்டுள்ளது. மாலைக்கண் நோய் வைட்டமின் 'ஏ' பற்றாக்குறையால் வருகிறது. இந்நோயினால் பாதிக்கப் பட்டவர்கள் பால், கீரை, பப்பாளி, மீன் பழங்கள் உண்டுவந்தால் கண் சம்மந்தமான நோய் போக்கமுடியும் என்பதை அறியலாம்.

## தலைநோய்

தலைநோய் என்பது தலைவலி என்னும் நோய்வகையாகும். இதனைத் தலை நோவு, தலைக்குத்து எனக் குறிப்பிடுவதை அறியலாம். தலைநோய் நரம்பு மண்டலத்துடன் இணைந்து செயல்படும் மூளையுடன் தொடர்பு உடையதாகும். தலைவலி மண்டைக்குள் ஏற்படும் வலியை உணரும் ஒரு நிலையாகும். வரப்போகும் நோய்களுக்கு அறிகுறியாகத் தலைவலி ஏற்படுவதுண்டு. தலையில் அமைந்துள்ள தசைநார்கள் அதிகமாக இறுக்கப்படுவதினால் தலைவலி ஏற்படுகின்றது. இந்நோயினைப் பற்றி சிலப்பதிகாரத்தில்,

"தலைநோய் வருத்தம் தன் மேல் இட்டு" (Venkatachalam Pillai, 1949)

என்ற பாடலடி உணர்த்துகின்றது. தலைநோயால் துன்புறுவதாகக் கூறி கோப்பெருந்தேவி பாண்டிய மன்னனிடமிருந்து பிரிந்து சென்றதாகக் கூறப்படுகிறது. மேலும் தலைநோயானது ஒரு செயலை மனதில் நினைத்துச் சிந்திக்கும் போதும், உடல்நிலை சரியில்லாத போதும் ஏற்படுவதுண்டு.

## மேனியில் ஏற்படும் நோய்கள்

கோடைக்காலத்தில் உடலில் ஏற்படும் சூட்டினால் வியர்வைக்குறுவும் கொப்புளங்களும் புண்களும் ஏற்படும். உடல் தூய்மை இல்லாமல் இருந்தாலும் உடலில் பல்வேறு நோய்கள் ஏற்படும். தேமல் புள்ளிகள், வடுக்கள் ஆகியவையும் தோன்றும். புண்கள் ஏற்படுவதற்குக் காரணம் வீரர்கள் போர் செய்யும்போது மார்புகளிலே யானைகளின் கொம்புகள் குத்திய புண்களும், வேல் கிழித்த பெரிய புண்களும், பகைவரது அம்புகள் துளைத்தனவாகச் சிலரது மார்புகளில் ஏற்பட்ட புண்களும், கூரிய வாள் கிழித்த புண்களும் இருந்தன. இவ்வாறு நம் உடலில் பல காரணங்களால் புண்கள் ஏற்படுவதை,

"யானை வெண்கோட அழுத்திய மார்பும்
நீள்வேல் கிழித்த நெடும்புண் ஆகமும்
எய்கணை கிழித்த மணிப்பூண் மார்பமும்
வைவாள் கிழித்த நெடும்பூண் மார்பமும்" (Venkatachalam Pillai, 1949)

என்ற பாடலில் அறியமுடிகிறது. இவ்வாறு ஏற்படும் புண்களால் வீக்கம் ஏற்படும் என்பதை,

"புண்மேற் புடையிற் புகைந்தாணுரு வியாது" (Tirutakkatevar, 2015)

என்னும் பாடலடியின் மூலம் அறியமுடிகிறது. புண்கள் அதிகமான வலியினைத் தரும். அதன் காரணமாக அவர்கள் புலம்பிக்கொண்டே இருப்பர் என்பதை,

"புண்ணும் போன்று புலம்புமென் நெஞ்சரோ" (Tirutakkatevar, 2015)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. போர்களத்தில் போர்செய்யும் போது படைக்கலன்களால் உடலில் காயம் பட்டவர்களுக்கு நெய்க்குழி வைத்தல், பத்தரில் கிடத்தல், ஒடிந்த இரும்புகளை அறுத்தெடுத்தல், புண்களுக்கு மருந்து வைத்தல் போன்ற முறைகளால் புண்களை ஆற்றியுள்ளனர். புண்களை ஆற்றும் சிறந்த மருந்தாக நெய்யினைப் பயன்படுத்தியுள்ளதை,

"படுகளத்தில் நொந்தவர்க்குப் பலகிழிநெய் பற்றுடன்
இடுமருந்து பூசவும் இனிப்பொருள் அளித்தபின்" (Duraiswamy Pillai, 2019)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். மேலும், போர்களத்தில் விழுப்புண் பட்ட வீரர்களுக்கு துணிகளில் நெய்பூசி மருந்து இடுவதற்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து உதயகுமாரன் நலம் விசாரித்துள்ளான். நெய்யானது மனித உடலில் ஏற்படும் புண்களுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்பட்டதை அறியமுடிகிறது

## மனநோய்

மனநோய் என்பது ஒரு மனஆளுமைக் கோளாறு. இந்நோயின் விளைவாக இயல்புத் தன்மை மற்றும் நடத்தை மீறல், சமூக விதிமுறைகளை நிராகரித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவர். மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பதற்றம் மற்றும் குற்ற உணர்வு, தற்கொலை எண்ணங்கள் போன்றவை தோன்றும். மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் பித்தன், பித்து பிடித்தவன், பயித்தியம் என்றும் அழைக்கப்படுவர். மனநல பாதிக்கப்பட்டவர்களது செயல்கள் இயல்பு நிலையிலிருந்து மாறுபட்டும், அவர்களைப் பயித்தியம் என்று அழைப்பதையும், அவர்களின் பண்பு மாறுபட்டும் காணப்படுவதை,

"பயித்தியங் கொண்டவர் பண்பும் தொக்கும்" (Vellaivaarananaar, 2016)

என்ற பாடலடிகளில் அறியமுடிகிறது. அவனது இயல்பு நிலைக்கு மீறிய நடவடிக்கை பற்றி அவன் ஏதும் உணர மாட்டான். இத்தகைய மனநோயாளியை மணிமேகலைக் காப்பியத்தில் மையலுற்றோன் எனக் கூறப்பட்டுள்ளது.

## பசலை நோய்

"பசலை நோய் என்பது தலைவனின் பிரிவால் தலைவிக்கு ஏற்படுவதாகும். உணவு, உறக்கம் இல்லாது காதலனையே சிந்தித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு ஏற்படுவதாகும். தலைவியின் மேனியின் நிறம் மாறும். இந்நோயினை பசலைநோய், 'பசலை பாய்தல்' என்றும் குறிப்பிடுவர். தொல்காப்பியத்தில் பசலைநோயினை "பசலைத் திறனாரும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சரியான உணவும் போதிய உறக்கமும் இல்லாவிட்டால் நாளடைவில் கண்கள் குழிவிழிந்து உடலிளைத்து போவது இயற்கையே. இந்நோய்க்கு மருந்து காதலனைத் தவிர வேறு மருந்தால் குணப்படுத்த முடியாது. வெவ்வேறு நோய்களுக்கு பல்வேறு மருந்துகள் இருக்க பசலை நோய்க்கு மட்டும் காதலனே மருந்து எனக் காப்பியங்கள் எடுத்துரைக்கின்றன. பசலை நோய்க்கு மருந்தாக நம் காதலர் குறித்த நேரத்தில் வருவார். நீ இப்போது உருகி வருந்திச் சினந்து முன்கை வளையல்கள் கழன்று விழ மெலிய வேண்டாம் எனத் தோழி ஆறுதல் கூறுவதை,

"வருவர்நங் கேள்வ ரின்னே வாணுதற் பசலை தீர

வுருகிநைந் துடன்று முன்கை வளையுக மெலிய வேண்டா" (Tirutakkatevar, 2015)

என்ற பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன. பசலை நோயானது மாலை நேரத்தில் பெண்களைத் துன்பமடையச்செய்வதை,

"கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமொடு

அந்தி என்னும் பசலைமெய் யாட்டி"

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

## பிறவி நோய்கள்

குழந்தைகள் பிறக்கும்போதே சில உடல் உறுப்புகள் குறைந்தோ அல்லது உடல் உறுப்புகள் இருந்தும் செயலின்றி இருப்பதும், உடல் உறுப்புகளின் இயல்பான அளவுக்கு மாறாக இருப்பதும் ஊனங்கள் ஆகும். ஐம்புலன்களின் குறைபாடுகளாகக் கண் இருந்தும் பார்வை இல்லாமல் இருப்பதும், காது இருந்தும் கேட்காமல் இருப்பதும், வாய் இருந்தும் ஊமையாருப்பதும், கை மற்றும் கால்கள் இருந்தும் செயல்படாமல் இருப்பதும் பிறவி ஊனங்கள் ஆகும். சங்க இலக்கியத்தில் எட்டு வகையான உடல் ஊனங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளதை,

"சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்

கூனும் குறளும் செவிடும்

 DOI: 10.34256/irjt22447

மாவும் மருளும் உள்பட வாழ்நர்க்

கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம்" (Puliyur Kesigan, 2010)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன

எட்டு வகையான உடல் ஊனங்களில் கூனும் குறளும் பிற ஊன நிலையிலிருந்து வேறுபட்டும் காணப்படுகின்றன. மற்ற ஊனங்களான குருடு, செவிடு, ஊமை, முடம் போன்றவை உறுப்புக் குறையாக அமைகிறது. இவற்றுள் உடலின் அமைப்பில் ஏற்பட்ட குறை கூன் எனவும், முதுகெலும்பு வளைந்து பிறப்பதாகும். உடலின் அளவில் ஏற்பட்ட குறை குறள் எனவும், குள்ளமாக வளர்ச்சியற்று பிறப்பதாகும் என்பதை,

"கூனுங் குறளு மூமுஞ் செவிடும்"

என்ற பாடலடியால் அறியமுடிகிறது. கூனரின் உடல் அமைப்பு களைக் கொட்டியின் பிடியைப் போன்று வளைந்த உடலாக இருக்கும் என்பதையும், குறளரின் உடல் அமைப்பு ஆமை கைவீசி நடக்குமாறு இருக்கும் எனப்படுவதை,

"கொட்டுப் பிடிபோலுங் கூனுங் குறளாமை

விட்டு நடப்பன போற் சிந்தும் வளைந்து"

என்ற பாடலில் அறியமுடிகிறது.

## ஊமை காது கேளாமை

வாய் இருந்தும் பேச்சு வரவில்லையெனில் அவர்களை ஊமையர் என்றும், காது இருந்தும் ஒலியினைக் கேட்கமுடியாதெனில் அவர்களைக் காதுகேளாதோர் அல்லது செவிடு என்றும் அழைப்பர். ஊமையைச் மூங்கை என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளதை,

"கையி னாற்சொலக் கண்களிற் கேட்டிடு

மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேன்"

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது. மேலும், வாய்பேச முடியாதவர்கள் கருத்தினைப் பரிமாறிக்கொள்வதற்காகக் கையினால் அசைத்துக் கூறக் கண்ணால் கண்டறிவர் என்று ஊமையர் செயல்பாட்டினைக் கூறுகிறது. பேச்சுக் குறைபாடான ஊமை நிலையும், செவிப்புலன் உணர்வின் குறைபாடான செவிடும் ஒன்றோடொன்று தொடர்புடையன. ஊமையாக இருக்கும் ஒருவன் செவிடனாகவும் இருக்கலாம் என்பதை,

"ஒன்றிய செவிடும் ஊமும் ஒருவனால் பெறுதலுண்டோ"

என்ற பாடல்வரியில் அறியமுடிகிறது.

## குருடு

மனிதனுக்குக் கண்கள் இருந்தும் பார்வை இல்லையெனில் அக்குறைபாட்டைக் குருடு என்றழைப்பர். இக்குறைபாடு உள்ளவர்களை அந்தகன் என்னும் சொல்லால் கூறப்படுவதை,

"அந்தகன் அந்தகற்கு ஆறு சொலல்ஒக்கும்"

என்னும் பாடலடியில் அறியமுடிகிறது. கண்பார்வையானது தெளிவாகத் தெரியாமல் இருப்பதை ஊனக்கண் என்பதனை,

"ஊன்கொண்ட காட்சி முதலாக உடைத்ததெல்லாம்"

என்ற பாடலடியில் அறியமுடிகிறது.

DOI: 10.34256/irjt22447

## முடிவுரை

உலகில் பிறந்த அனைத்து உயினத்திற்கும் பிறப்பு இறப்பு என்பது பொதுவானதாகும் இறப்பானது இயற்கையாகவும் நோய்களினாலும் வருகின்றது நோய்கள் சீரான உடல்நிலையை பாதிக்கின்ற ஒரு செயலாகும் உடலில் உள்ள வாதம் பித்தம் கபம் இம்மூன்றும் கூடினாலோ குறைந்தாலோ நோய் தோன்றும் என்பதை அறியமுடிகிறது நோயினை வியாதி பிணி என்னும் பெயர்களில் குறிப்பிட்டுள்ளதையும் நோயினை மூன்று வகையாக பகுத்துள்ளதையும் அறியமுடிகிறது அவை மருந்தினால் குணப்படுத்தக் கூடியதும் மருந்தினால் குணப்படுத்த முடியாததும் உடலின் வெளிப்புறத்தில் நோய் குணமாகிவிட்டதுபோல் காணப்பட்டாலும் உடலின் உள்ளே அந்நோய் தீராமல் இருப்பதுமாக வகைப்படுத்தியுள்ளனர் குட்ட நோய் என்னும் தொழுநோய் வஞ்சித்தல் ஆசை உயிரை கொல்லுதல் சூழ்ச்சியினால் ஒழித்தல் போன்ற செயல்களைச் செய்தவர்களுக்குவரும் என்றும் இந்நோயால் பாதிக்கப்பட்டவரின் உடல் மெலிந்தும் தோல் சுருங்கியும் பற்கள் உதிர்ந்தும் காணபபடுவர் இந்நோயினை குணப்படுத்துவது அரிதானதாகும் மயற்கைநோய் பெண்கள் கருவுற்ற காலத்தில் வரும் நோயாகும் இந்நோயினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அசாதாரண உடல்நிலையையும் பிடிக்காத உணவுப்பொருட்களின் மீதும் ஆசைகள் ஏற்படும் இந்நோயிற்கான மருந்தாக பெண்களின் ஆசையை நிறைவேற்றுவதே ஆகும் பசிப்பிணி நோயினை யானைத்தீ நோய் எனக் காப்பியங்களில் குறிப்பிட்டுள்ளனர் இந்நோய் இயல்புநிலையை மாற்றிவிடும் தன்மையைக் கொண்டதாகும் இந்நோய்க்கான மருந்தாக உணவும் நாவற்பழமும் சிறந்த மருந்து என்பதை அறியமுடிகிறது மாலை நேரங்களில் கண் பார்வை குறைந்து போனால் அதை மாலைக்கண் நோய் என்பர் இந்நோய் வைட்டமின் ஏ குறைப்பாட்டால் வருவதையும் அறியமுடிகிறது தலைநோய் தலையில் உள்ள தசைநார்கள் இறுகப்படுவதால் ஏற்படுகிறது தோலின் மீது கொப்புளங்களும் புண்களும் ஏற்படுகின்றன கோடைக்காலத்தில் கொப்புளங்கள் ஏற்பட்டு புண்களாவதும் போரில் நடைபெறும் தாக்குதலால் அதிக புண்கள் ஏற்பட்டுள்ளன அவற்றிற்கு நெய் இட்டு புண்களை ஆற்றியுள்ளனர் தலைவனின் பிரிவால் தலைவிக்கு ஏற்படும் நோய் பசலை நோய் இந்நோய் உடலினை மெலியச் செய்தல் நெற்றியில் பசலைப் படர்தல் போன்றவை தோன்றும் என்றும் இந்நோய்கான மருந்து தலைவனே என்பதும் அறியமுடிகிறது பிறவி நோய்கள் குழந்தைகள் பிறக்கும்போதே ஏற்படுவதாகும் குருடு செவிடு ஊமை முடம் போன்றவை உறுப்புக் குறையாக அமைகிறது காதுகேளாதோரை செவிடு என்றும் ஊமையைச் மூங்கை என்றும் அழைத்துள்ளனர் பார்வையற்றவரை அந்தகன் என்று குறிப்பிடுவதையும் அறியமுடிகிறது

## References


Duraiswamy Pillai, A. (2019) Yashodhara Kaviyam Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

Murugesan, K. (2016) Uthayanakumarakaviyam Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

Puliyur Kesigan. (2010) Purananuru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

Tirutakkatevar (2015) Seevaga Sinthaamani Moolamum Uraiyum, Gowra Publications, Chennai, India

Vellaivaarananaar, K. (2016) Neelakesi Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

Venkatachalam Pillai, A. (1949) Silappathikaram Moolamum Uraiyum, Saiva Siddhanta Works Publishing Society Tinnevelly, Limited, Chennai, India

Venkatasami Nattar, N.M., Duraiswamy Pillai, A. (2019) Manimegalai Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India


**Funding:** No funding was received for conducting this study

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License

# THIRUVALLUVAR UNIVERSITY

(A State University Accredited with B+ Grade by NAAC)

Serkkadu, Vellore, Tamil Nadu – 632 115.

TAMIL NADU STATE COUNCIL FOR HIGHER EDUCATION (TANSCHE) SPONSORED TWO DAY NATIONAL LEVEL SEMINAR

ON

"KNOWLEDGE, ATTITUDES, AWARENESS AND PRACTICE OF INDIAN SYSTEM OF MEDICINE AMONG THE POOR IN TAMIL NADU"

# Certificate

This is to certified that Mr./Mrs./Dr. K. SINGARAVELU, Assistant Professor, Department of Tamil has participated / presented a paper entitled தமிழ் மருத்துவத்தின் சிறப்பு in the Tamil Nadu State Council for Higher Education (TANSCHE) Sponsored Two Day National Level Seminar on, **"Knowledge, Attitudes, Awareness and Practice of Indian System of Medicine among the Poor in Tamil Nadu"** Organized by the Department of Economics on 20th and 21st April, 2022 at Thiruvalluvar University, Serkkadu, Vellore, Tamil Nadu - 632 115.

M. Yoganand — Organizing Secretary

Seminar Coordinator

Registrar I/c

101

# THIRUVALLUVAR UNIVERSITY

(A State University Accredited with B+ Grade by NAAC)

Serkkadu, Vellore, Tamil Nadu – 632 115.

**TAMIL NADU STATE COUNCIL FOR HIGHER EDUCATION (TANSCHE) SPONSORED TWO DAY NATIONAL LEVEL SEMINAR**

**ON**

**"KNOWLEDGE, ATTITUDES, AWARENESS AND PRACTICE OF INDIAN SYSTEM OF MEDICINE AMONG THE POOR IN TAMIL NADU"**

## Certificate of Resource Person

This is to certified that Mr./Mrs./Dr. Dr. K. SINGARAVELU, Assistant Professor, Department of Tamil has acted as a Resource Person in the Tamil Nadu State Council for Higher Education (TANSCHE) Sponsored Two Day National Level Seminar on, **"Knowledge, Attitudes, Awareness and Practice of Indian System of Medicine among the Poor in Tamil Nadu"** Organized by the Department of Economics on 20th and 21st April, 2022 at Thiruvalluvar University, Serkkadu, Vellore, Tamil Nadu - 632 115.

| | | |
|---|---|---|
| Organizing Secretary | Seminar Coordinator | Registrar I/c |

OPEN ACCESS

Manuscript ID:
TAM-07012022-5094

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.04.2022

Accepted: 19.05.2022

Published: 01.07.2022

Citation:
Sasikala, K. "Human Body Thoughts Shown by Thiruvalluvar." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 1, 2022, pp. 55-59.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i1.5094.

*Corresponding Author:
gsasi0494@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Human Body thoughts Shown by Thiruvalluvar

**Dr. K. Singharavelu**
*Assistant Professor, Tamil Department*
*Thiruvalluvar University, Serkadu, Vellore, Tamil Nadu, India*

**G. Sasikala**
*Ph.D. Researcher, Tamil Department*
*Thiruvalluvar University, Serkadu, Vellore, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0002-8558-8354*

**Abstract**

Literature has been created in various ways since the beginning of the development of human knowledge. They tell the future people about the mentality, social environment, heritage and natural resources of the people who lived in their respective times. However, Thirukkural is a book of charity that is suitable for all times and highlights the actions to be followed and the actions to be avoided in people's lives. In this way, this article explains what the human body is made of, how to control the senses of the external organs of the body, the methods of food consumption, and the foods to be avoided.

**Key Words:** Thirukkural, Knowledge, Physiological Thoughts, Food, Five Senses.

**References**

1. Krishnamoorthi, S. First Edition 1993, *Thirukkural Parimelazhagar Urai*, Chennai, Tamil Naadu Arasu Tholporul Aaivutthuraiveliyeedu.
2. Gowmaareeswari. S. First Edition 2009. *Pathinenkezhkanakku Noolgal*, Rayapettai, Chennai, Saradha Pathippagam.
3. U.Ve. Saminathaiyar, Ninth Edition 2013 Manimegalai, Besan Nagar, Chennai U.Ve.Sa Nool Nilaiyam.

| | | | |
|---|---|---|---|
| 58 | இளைஞர்களின் நோக்கில் அஜந்தா நாவல் | சி. ஷரீபா & க. அனிதா குமாரி | 370 |
| 59 | தி. ராஜநாராயணனின் நிலைமிறுத்தல் என்னும் சிறுகதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள் | நூ. மாலா | 375 |
| 60 | தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கிய சிந்தனைகள் | கா. வ. பாந்தாமன் | 378 |
| 61 | மாணிக்கவாசகர் பாடல்களில் அகம் | அ. சோ. ஸ்ரீதேவி | 384 |
| 62 | வள்ளலார் வழி காட்டும் சமுதாய உறவு | நா. அமிர்த ராணி | 388 |
| 63 | சங்க இலக்கியத்தில் இராமன் | ச. ரம்யா & முனைவர். அம்பிகா காமேஸ்வர் | 391 |
| 64 | "தோற்றுவிட்டேன்" நாவலில் கு. கலியபெருமாள் அவர்களின் நாவல் சிந்தனைகள் | இரா. வேதகனி | 396 |
| 65 | திருக்குறளில் உவமை நலம் | முனைவர். சி. அருள் செல்வம் | 402 |
| 66 | அகநானூற்றில் காடுகள் | முனைவர் மு. முரளி | 410 |
| 67 | காப்பியங்களில் இடம்பெறும் கடிதத் தொடர்புச் செய்திகள் | ந. ராக்கம்மாள் & முனைவர். மு. பஞ்சவர்ணம் | 415 |
| 68 | தமிழ் இலக்கியங்களில் உளவியல் கூறுகள் | சிந்தியா ஜி & முனைவர். இரா. ஜெயஸ்ரீ | 419 |
| 69 | தமிழர் மெய்யியலில் சார்வாகம் | முனைவர். மா. மாணிக்கம் | 422 |
| 70 | திருவருட்பயனில் முப்பொருள் உண்மை | முனைவர். நா. சிவகுரு | 427 |
| 71 | சங்க இலக்கிய அகபாடல்களில் வரலாற்றுச் செய்திகள் | ச. பிரிசில்லா | 433 |
| 72 | சங்க இலக்கியமும் வேளாண்மையும் | மு. அஜீத் குமார் | 439 |
| 73 | காந்தள் நாட்கள் - இன்குலாப் கவிதைகளில் சாதிய எதிர்ப்புகள் | முனைவர் சா. பால முருகன் | 443 |
| 74 | தொல்காப்பியத்தில் காலமயக்கம் | முனைவர் இரா. பாலகிருஷ்ணா | 453 |
| 75 | தமிழ் இலக்கியத்தில் விலங்கு விளையாட்டுப் பதிவுகளும் இக்கால நிலையும் | கவிதா . த | 457 |

# திருவருட்பயனில் முப்பொருள் உவமை

முனைவர் நா. சிவகுரு
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர். 632 115
மின்னஞ்சல் : arasi162010@gmail.com

70

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியங்கள் மனிதனைப் பண்படுத்துவன. பக்தி இலக்கியங்கள் மனிதனை செழுமைப்படுத்துவன. சைவ இலக்கியங்களை மனித மனத்துவத்தை எடுத்துக் கூறும் இயல்பினை உடையன. பன்னிருதிருமுறைகள் தோத்திரப்பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. அதுபோன்று சாத்திரங்கள் என்று பதிநான்கு நூல்கள் இவைகளுள் உமாபதி சிவம் எட்டுநூல்களை இயற்றி உள்ளார். அதில் ஒன்று திருவருட்பயன். இதில் சைவ சமயம் குறிப்பிடும் முப்பொருள்களான பதி , பசு, பாசம் குறித்த குறிப்புகள் உவமையின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பதி - இறைவன், பசு - உயிர்கள், பாசம் - மலங்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. முப்பொருள்களான இவற்றைப்பற்றி இவற்றை விளக்க ஆசிரியர் எவ்வகை உவமைகளைப் பயன்படுத்தி உள்ளார் என்பதை விளக்குவதே இக்கட்டுரை. பதி தானே அனைத்தையும் அறியக்கூடியவன். உயிர்கள் அறிவிக்க அறிவன. பாசம் அறிவித்தாலும் அறியாதது. இவற்றை விளக்க உவமைகள் பயன் பட்டுள்ளன. அவற்றை விளக்கும் முகமாக இக்கட்டுரை அமைந்துள்ளது

## முன்னுரை

பக்தி இலக்கியங்கள் மனித மனத்தை செழுமைப்படுத்துவன. மனித வாழ்வின் உண்மைத் தன்மையை உணர்ந்துகொள்ள இவை உதவுகின்றன. பன்னிருதிருமுறைகள் தோத்திரப்பாடல்களாக அமைந்துள்ளன. இதன் அடுத்தகட்டமாக சாத்திர நூல்கள் அமைந்துள்ளன. சாத்திர நூல்கள் பதினான்கு ஆகும். இவைகள் மெய்கண்டசாத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றுள் உமாபதி சிவம் எட்டுநூல்களை இயற்றி உள்ளார். இவர் இயற்றிய எட்டு நூல்கள் சித்தாந்த அட்டகம் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று திருவருட்பயன் என்னும் நூல் ஆகும். இந்நூல் திருக்குறள் அமைப்பில் குறள் வெண்பா அமைப்பில் பத்து அதிகாரங்களாக அமைந்திருக்கும். ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்துப் பாடல்கள் என்ற அடிப்படையில் மொத்தம் நூறு பாடல்களைக் கொண்டு அமைந்து இருக்கும். இந்நூறு பாடல்களில் இறைவன் , உயிர்கள், உயிர்களைப்பிடித்துள்ள மலங்கள் இவற்றின் தன்மைகளைப்பற்றி உவமைகளின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர் உமாபதிசிவம். சைவசமயம் முப்பொருள் உண்மை என்று குறிப்பிடும். அவை , பதி, பசு, பாசம் என்பனவாகும். இம்முப்பொருள் பற்றி அமைந்துள்ள உவமைகளைப்பற்றி எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சைவ சமயம் குறிப்பிடும் முப்பொருள்

சைவ சமயம் முப்பொருள் கொள்கையை உடையது. முப்பொருள் என்பது இறைவன் , உயிர்கள்,மலங்கள் என்பன. இதனை பதி - இறைவன், பசு - உயிர்கள், பாசம் - மலங்கள்(ஆணவம்,கன்மம்,மாயை) என்று வகைப்படுத்துவர். பதியாகிய இறைவன் சத்துப்பொருள் என்றும் பிற அசத்துப்பொருள் என்றும் அழைக்கப்படுகின்றன. இறைவன் தானே அனைத்தையும் ஒருங்கே அறியும்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் கலை மற்றும் அறிவியல் புலம் தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரைலி தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volum
ISSN:2582-9599

ISSN (Online) : 2349-1639 ISSN (Print) : 2320-3412

# தமிழாய்வுச் சங்கமம்

# TAMILAIVU SANGAMAM

VOL - VIII டிசம்பர் 2022 ISSUE - 21

[illegible] ஆண்டு சந்தா ₹ 1000

Cosmos
CIF : 3.458

IRJIF
IRJIF : 3.669

Indexed & Abstracted in

CiteFactor · Cosmos · DAIJ · DOAJ · DRJI · International Innovative Journal Impact Factor (IIJIF) · Journal Index · ESJI · Impact Factor · ijiFactor · Universal Impact Factor · OAJI .net

## INDIAN ACADEMIC RESEARCHERS ASSOCIATION

www.iaraindia.com
E.mail : tamilaivusangamam@gmail.com

# தமிழாய்வுச் சங்கமம்

பன்னாட்டுத் தமிழ் இலக்கிய ஆய்விதழ்

# TAMILAIVU SANGAMAM

(An International Research Journal on Tamil Literature)

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF) Formally UGC Approved Journal (64089)

பகுதி VIII டிசம்பர் 2022 பதிப்பு 21

140

பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | குன்றிலிட்ட தீ என்னும் நாவலில் பெண்ணியப் பார்வை<br>திருமதி.இர.கிருஷ்ணவேணி | 1-4 |
| 2. | தமிழ் இலக்கியங்களில் நவீனத்துவக் கோட்பாடுகளின் முன்மாதிரிகள்<br>முனைவர் இரா. புவனேஸ்வரி | 5-8 |
| 3. | தமிழ் இலக்கியங்களில் நவீனத்துவ கோட்பாடுகள் சித்திரக் கவியில் நவீனத்துவக் கோட்பாடுகள்<br>கு.திலகவதி | 9-16 |
| 4. | திணைமாலை நூற்றைம்பதில் பரிணாமக்கோட்பாடு<br>திருமதி ச.மீனாட்சி | 17-24 |
| 5. | தொல்காப்பியத்தில் பாட வேறுபாடுகள்<br>முனைவர் கு.சிவப்பிரகாசம் | 25-30 |
| 6. | புறநானூற்றில் நவீன போர்நுட்பம்<br>முனைவர் பொ.இரமேஷ் | 31-36 |
| 7. | நெடுநல்வாடையில் நவீனத்துவக் கோட்பாடுகள்<br>முனைவர் அர.மீனா | 37-44 |
| 8. | கூர்தலறக் கோட்பாட்டின் பார்வையில் தமிழ் இலக்கியம்<br>முனைவர் சி.தேவி | 45-50 |
| 9. | சென்னைக்கு மிக அருகில் புதினத்தில் சமுதாய மதிப்பும் மதிப்புச் சிக்கல்களும்<br>திருமதி.மு.புங்கோதை | 51-60 |
| 10. | திருக்குறளில் அறநெறிக்கோட்பாடுகள்<br>மு.சதீஸ்குமார் | 61-68 |
| 11. | பெண் படைப்பாளர்களின் படைப்பாளுமைத் திறன்<br>முனைவர். ப. ஜெயகிருஷ்ணன் | 69-74 |
| 12. | தமிழ் இலக்கியங்களில் உரைநடை வளர்ச்சிப் போக்கு : ஓர் ஆய்வு<br>இராமக்கவுண்டர் பேபிசாலினி | 75-82 |
| 13. | பாரதி கவிதைகளில் பெண்ணியமும் சமூகமும்<br>முனைவர் பு.மு.அன்புசிவா | 83-86 |
| 14. | அமைப்பியல் நோக்கில் பூசலார் - வாயிலார் புராணம்<br>முனைவர் நா.சிவகுரு | 87-90 |
| 15. | புலப்பாட்டு நெறிக் கோட்பாடு<br>திருமதி பெ.ஆனந்தி | 91-98 |


Shot on 2b

ISSN: 2320-3412(P), 2349-1639(O)
இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி VIII, பதிப்பு 21 டிசம்பர் 2022
Formally UGC Approved Journal (64089), © Author

# அமைப்பியல் நோக்கில் பூசலார் - வாயிலார் புராணம்

முனைவர் நா.சிவகுரு
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர் - 632 115

பன்னிரு திருமுறைகளில் நிறைவாக அமைந்துள்ள நூல் பெரியபுராணம். இதனை இயற்றியவர் சேக்கிழார். இதற்கு மூல நூல் சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகை, இதனை அடியெற்றி நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி எனும் நூலினை இயற்றினார். இதனை அடியெற்றி சேக்கிழார் தனது நூலினைப் படைக்கின்றார். நாயன்மார்கள் வாழ்ந்த வாழிடங்கள் வழித்திருப்பயணம் மேற்கொண்டு அங்கு தான் சேகரித்தத் தகவல்களை வைத்து அதை ஒரு கதைப்பொதி பாடல்களாக் பகுத்துத் தந்தார் சேக்கிழார். அதன் அடிப்படையில் அவர் கூறிய நாயன்மார் வரலாற்றில் இருந்து பூசலார் மற்றும் வாயிலார் என்ற இரு நாயன்மார் வரலாறு மட்டும் இங்கு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தற்கால கோட்பாடுகளில் ஒன்றாக உள்ள அமைப்பியல் கோட்பாடு எவ்விதம் இவ்விருவரின் புராணத்திலும் பொருந்தும் என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## அமைப்பியல் - விளக்கம்

இன்று வளர்ந்து வரும் துறைகளில் ஒன்று அமைப்பியல். அமைப்பு என்ற சொல் பழையதாக இருந்தாலும் இக்கொள்கை நவீன காலத்திற்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது எனலாம். அமைப்பிலைக் குறிக்கும் பொழுது விளாதிமிர் பிராப்பை கூறாமல் இருக்க முடியாது. ஏனெனில் இவர் தான் அமைப்பியலின் அடிப்படை. இவர் நூறு நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து அவற்றின் பண்புகளின் அடிப்படையில் முப்பது பிரிவுகளாகப்பிரித்து விளக்கினார். இதன் பின் அது வளர்ச்சி அடைந்தது.

இலக்கியத்தை ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொள்ளும் பொழுது அதை பல பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். இதனை “இலக்கியத்தை (அல்லது எந்தப் பொருளையும்) ஆய்வுக்கென எடுத்துக்கொள்கின்ற போது அதனைத் தனக்குள் பல உறுப்புகள் கொண்ட குறிப்பிட்ட ஓர் ஒழுங்கமைவுடன் கூடிய ஓர் அமைப்பாக அமைப்பியல் காணுகின்றது. அமைப்பு என்பது ஒரு முழுமை.அதே போது இந்த முழுமை அதன் ஒவ்வொரு உறுப்பையும் பகுதியையும் குறிக்கும்” என்று தி.சு நடராசன் குறிப்பிடுவார்(திறனாய்வுக்கலை ப.201)

அமைப்பியலில் வினைநிகழ்வு ஒரு முக்கியக்கூறு ஆகும். இதனை “அமைப்பின் வினைநிகழ்வைக் குறிப்பிட்ட செயல் மட்டுமே கொண்டு வரையறுப்பர் பலர். ஆனால்

Vol. 10 | Special Issue 1 | January 2023
P-ISSN: 2321-788X

145

SHANLAX

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
இராமநாதபுரம்

பிறழ் ஆய்விதழ்

ஒப்பீட்டுச் சமயம், சமூக நல்லுறவுத் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# இலக்கியங்களில் தமிழர் அறிவுருவாக்க முறைகள்

கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

திரு இருதய சபை அருட்சகோதரர்களால் நடத்தப்படும் நிறுவனம்
அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது
(தேசசியத் தர மதிப்பீட்டில் தரம் பெற்றது)
ஆஞ்சலோ நகர், முத்துப்பேட்டை
இராமநாதபுரம்

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS
SHANLAX Journals

Shot on 2b

147


13 சங்க இலக்கியத்தில் விண்மீன்கள்
முனைவர் சி. பரமேஸ்வரி 60

14 புறநானூற்றில் வாழ்வியல் அறப்பண்பாடு
முனைவர் பா. ராஜபாண்டி 65

15 அமரர் மரியசேவியர் அடிகளாரின் திருப்பாடுகளின் காட்சிகள்
வழியான அறிவுருவாக்கம் 70
அருட்பணியாளர் ம. வி. இ. இரவிச்சந்திரன்

16 தொல்காப்பியரின் நோக்குக் கோட்பாட்டுச் சிந்தனை
முனைவர் அ.ரேவதி 71

17 இந்து, பௌத்த சமயங்களுக்கிடையிலான ஊடாட்டங்கள் -
ஓர் மெய்யியல் ஆய்வு 85
இ. சகாயசீலன்

18 வறுமையில் சமயத்தின் செல்வாக்கு - ஓர் மெய்யியல் ஆய்வு
இ. சகாயசீலன் 90

19 கலிங்கத்துப் பரணியில் அணிநலம்
முனைவர் க. சரவணன் 95

20 மீனியலின் முன்னோடி தமிழன்
'நல்லாசிரியர்சு ச. சேட்டு மதார்சா 100

21 ஐங்குறுநூறு குறிஞ்சித்திணை வெறிப்பத்தில் தோழி
உணர்த்தும் காலம் 103
முனைவர் நா. சிவகுரு

22 கி.வா.ஜகநாதன் சிறுகதைகளில் கதைமாந்தர்களின் பண்பு 107
நலன்கள் - ஓர் ஆய்வு. 109
முனைவர் சு. சோமசுந்தரம்

23 "தொடக்ககால தமிழ் இலக்கியங்களில் ஆசீவகச் சிந்தனைகள்" 112
கு. சுவாமிநாத சர்மா

24 சூழலியல் நோக்கில் ஐங்குறுநூற்றில் நீர்வாழ் உயிரினங்கள் 120
முனைவர் மு. விஜயசாரதா


Shot on 2b

SHANLAX
International Journal of Arts, Science and Humanities



# ஐங்குறுநூறு குறிஞ்சித்திணை வெறிப்பத்தில் தோழி உணர்த்தும் காலம்

முனைவர் நா. சிவகுரு
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

மலர் 10
இதழ் 1
[illegible]
ஆண்டு 2023
P-ISSN: 2321-788X

## முன்னுரை

அகத்துறைப் பாடல்களின் தொகுப்பாக அமைந்துள்ள நூல்களில் நிலம் சார்ந்த 500 பாடல்களைக்கொண்ட நூல். குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும். அது காலத்தையும் நன்கு உணர்த்தும். தலைவன் வரைவு நீட்டித்த வழி தலைவி அச்சம் கொள்ளுவாள். அவள் உடல் அளவில் மாற்றம் ஏற்படும். அதனை உணர்ந்த செவிலி வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த முயற்சி மேற்கொண்டு அதற்கான ஏற்பாடுகளை செய்வாள். அச்சமயத்தில் தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்பாள். தலைவன் தலைவி இருவரும் மேற்கொண்ட களவொழுக்கத்தினை எடுத்துக்கூறி தலைவியை தலைவனோடு சேர்த்து வைத்து விட்டால் தலைவியின் உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் மாறிவிடும் என்று எடுத்துரைக்கின்றாள். ஐங்குறுநூறு குறிஞ்சித்திணை வெறிப்பத்தில் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பினைத் தோழி வெளிப்படுத்தி கற்பு வாழ்விற்கு தலைவியை உட்படுத்துமாறு உணர்த்துகின்றாள். மேலும் வெறி என்பதற்கு மணம் என்ற பொருள் உண்டு. ஆதலால் இங்கு வேலன் வெறியாட்டினைத் தவிர்த்து தலைவனுக்குத் தலைவியை மணம் முடித்துக்கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதைக்காணலாம்

எச்செயலுக்கும் ஒரு காலம் உண்டு. காலம் கடந்து செய்யும் செயல்கள் நன்மையினைப் பயப்பது இல்லை. காலம் என்பதற்குப் பருவம் என்ற பொருள் உண்டு. தலைவிக்கு உரிய பருவம் வரும்பொழுது பாலது ஆணையின் காரணத்தினால் உடலும் மனமும் மாறும். அப்பருவத்தில் தலைவன் மீது அன்பு அதிகரிக்கும் மனம் தலைவனை நாடும் ஆனால் நாணமும் பயிர்ப்பும் அதை வெளிப்படுத்தாது மறைக்கும். அது செயலில் வெளிப்படும். உள்ளமும் உடலும் எச்செயலிலும் நாட்டம் கொள்ளாது. உடலில் பசலைப்படர்ந்து மெலிவு ஏற்பட்ட உடன் செவிலி வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்திட விழைகின்றாள்.



Shot on 2b